<u>**DEPOSITION OF WITNESS**</u>

<u>**In the Court of Judicial Magistrate No.II, Mettur**</u>

**Case No : C.C. 552/2025**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 02.12.2025.**

| | |
|---|---|
| **Name : தனசேகரி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

<u>**முதல் விசாரணை**</u>

1) நான் தங்கமாபுரிபட்டிணத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 என் பக்கத்து வீட்டை சேர்ந்தவர். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 2019 ம் வருடம் காலை நேரத்தில் நான் வீட்டிலிருந்த போது சண்டை எதுவும் நடக்கவில்லை. பிறகு காவல் நிலையத்திலிருந்து போலீசார் வந்த போது வீட்டிலிருந்த என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். வேறு ஒன்றும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

2) கடந்த 16.10.2019 ம் தேதி காலை 11 மணிக்கு நிலத்திற்கு பத்மாவதி வந்த போது எதிரிகள் இருவரும் பத்மாவதியை பார்த்து கெட்ட வார்த்தையால் பேசினார்களா என்றால் நான் பார்க்கவில்லை. விமல் கீழே கிடந்த கட்டையை எடுத்து புகார் கொடுப்பாயா என்று சொல்லி கை மேல் அடித்து காயம் ஏற்படுத்தினாரா என்றால் எனக்கு தெரியாது. விமல்ராஜ் கீழே இருந்த விறகு

கட்டையை எடுத்து பத்மாவதி வலது தோள்பட்டையில் அடித்து காயம் ஏற்படுத்தினாரா என்றால் இல்லை. பிறகு கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிச்சென்றனர் என்றால் இல்லை. சம்பவத்தை நேரில் பார்த்து விட்டு தற்பொழுது எதிரிகளுக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.12.02 17:56:43 +0530

Judicial Magistrate No.II,
Mettur.

**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 552/2025**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 02.12.2025.**

| **Name : மல்லிகா** | **Taluk :** |
|---|---|
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தங்கமாபுரிபட்டிணத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 என் பக்கத்து வீட்டை சேர்ந்தவர். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 2019 ம் வருடம் காலை நேரத்தில் நான் வீட்டிலிருந்த போது சண்டை எதுவும் நடக்கவில்லை. வேறு ஒன்றும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2** ஆகும். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

2) கடந்த 16.10.2019 ம் தேதி காலை 11 மணிக்கு நிலத்திற்கு பத்மாவதி வந்த போது எதிரிகள் இருவரும் பத்மாவதியை பார்த்து கெட்ட வார்த்தையால் பேசினார்களா என்றால் நான் பார்க்கவில்லை. விமல் கீழே கிடந்த கட்டையை எடுத்து புகார் கொடுப்பாயா என்று சொல்லி கை மேல் அடித்து காயம்

ஏற்படுத்தினாரா என்றால் எனக்கு தெரியாது. விமல்ராஜ் கீழே இருந்த விறகு கட்டையை எடுத்து பத்மாவதி வலது தோள்பட்டையில் அடித்து காயம் ஏற்படுத்தினாரா என்றால் இல்லை. பிறகு கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிச்சென்றனர் என்றால் இல்லை. சம்பவத்தை நேரில் பார்த்து விட்டு தற்பொழுது எதிரிகளுக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3) கடந்த 16.10.2019 ம் தேதி மதியம் 12.15 மணிக்கு நான் மற்றும் மாது இருவரும் நின்று கொண்டு இருந்த போது காவல் துறையினர் வரைந்த வரைபடத்திற்கு மகஜர் சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியாக கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை,

4) சம்பவ இடமான தங்கமாபுரிபட்டிணம் 3 வது வார்டு வாதி நிலத்தின் அருகே வரைந்த வரைபடத்திற்கு சாட்சியாக இருந்து விட்டு தற்போது எதிரியை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.12.02 17:56:49 +0530

Judicial Magistrate No.II,
Mettur.